புலமைக்கதிர் 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

கணிதம் | முயற்சி - பயிற்சி - வெற்றி | **நேரம்:- 01.00 மணி**

01) 1.பின்வரும் இலக்கங்களில் மிகப்பெரிய இலக்கம் எது?

6 9 3 0

.....

2. மிகச்சிறிய இலக்கம் எது?

.....

3. மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச்சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

.....

2) மாதமொன்றின் 31ம் திகதி சனிக்கிழமை எனின் அம்மாதத்திலுள்ள வெள்ளிக்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?

.....

3) 2016ம் ஆண்டின் முதலாம் திகதி செவ்வாய்க் கிழமை எனின் அவ்வருடத்தின் இறுதி நாள் என்ன கிழமை?

.....

4) 2015ம் ஆண்டின் தை 1ம் திகதி திங்கள் எனின் வருடத்தில் வைகாசி 6ம் திகதி என்ன கிழமை?

.....

5) பங்குனி மாதத்தில் 1ம் திகதி வெள்ளி எனின் 24ம் திகதி என்ன கிழமை?

.....

6) திங்கட்கிழமை ஆரம்பிக்கும் 31 நாட்களைக் கொண்ட மாதமொன்றின் நடுவில் வரும் தினம் யாது?

.....

7) தந்தைமார் இருவரும் மகன்மார் இருவருமாக பயணத்தை மேற்கொண்டனர் எனில் அங்கு பயணித்தவர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கையாக அமைவது?

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.lkedu.lk

8). சுமதியை விட யோகா அளையவள் ஆயினும் மதியை விட முத்தவள் சங்கீத சுமதியைக் காட்டிலும் மூத்தவன் ஆயினும் அகல்யாவைக் காட்டிலும் இளையவள்

1. இவர்களில் மிகவும் இளையவள் யார்?

.....

2. இவர்களை வயதுகளின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தினால் 1ம் 4ம் நிலையில் உள்ளவர்கள் யாவர்?

....

9) கண்ணன் புகைப்படம் ஒன்றைப் பார்த்து பின்வருமாறு கூறினான். இப்புகைப்படத்தில் இருப்பவர் என் தந்தையின் ஒரே மகனாவார் எனின் இப்புகைப்படத்தில் இருப்பவர் யார்?

.....

10) மாலை 6.00 மணிக்கு கடற்கரையில் நடந்து கொண்டிருந்த எனக்கு எனது நிழல் எனது இடப்பக்கம் விழுந்தது எனின் நான் எத்திசை நோக்கிச் செல்கிறேன்?

.....

11) படகு ஒன்று மணிக்கு 60km வேகத்தில் பயணிக்கின்றது படகு பயணிக்கும் திசைக்கு எதிராக மணிக்கு 30km வேகத்தில் நதி பாய்கின்றது. எனின் படகின் வேகம் யாதாக இருக்கும்?

.....

12) 6m நீளமும் 4m அகலமும் உடைய செவ்வடிவ கம்பி ஒன்று வளைத்து சதுர வடிவமாக்கப்பட்டது. எனின் அச்சதுர வடிவக் கம்பியின் ஒரு பக்க நீளம் யாது?


.....

13) இரண்டு கம்பங்களுக்கடையே ஆனதூரம் 10m ஆகும் அவ்வாறான 110m தூரத்தில் எத்தனை கம்பங்கள் நாட்டப்பட்டிருக்கும்?

.....

14) 4kg 750g சீனியைக் கொண்டு 250g கொண்ட எத்தனை பக்கற்றுக்கள் செய்யலாம்?

.....

15) 

தரப்பட்ட உருவில் செங்கோணங்கள் எத்தனை?

.....

16) அதிக தூரத்தை அளவிடுவதற்கு ஏற்ற அலகு எது?

.....

17) நான்கு தீக்குச்சிகளைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய உரோம எண்கள் எவை?

.....

18) விரித்து வைக்கப்பட்ட ஒரு புத்தகத்தின் இடதுபக்கத்திலுள்ள பக்க எண் 1409 ஆகும் அடுத்துவரும் இருபக்கங்களிலும் உள்ள பக்க எண்களை முறையே எழுதுக?

.....

19) சிறுமி ஒரு வடக்கு நோக்கி 10m சென்ற பின் கிழக்கு நோக்கி 5m சென்று ஆரம்ப இடத்தை அடைந்தாள் அவள் சென்ற தூரத்தின் வடிவத்தை வரைக?

.....

20) நள்ளிரவு 12.00 மணியளவினை நியம நேரத்தில் காட்டுக?

□□:□□

21) ரூபா 2 இல் எத்தனை 25 சதங்கள் உண்டு?

.....

22) வியாபாரி ஒருவர் 7 ரூபா வீதம் 100 மாம்பழங்களை வாங்கினார். அவற்றில் 25 மாம்பழங்கள் பழுதடைந்து விட்டன. எஞ்சிய மாம்பழங்களை 10 ரூபா விற்றார் எனின் அவருக்கு கிடைத்த லாபம் எவ்வளவு?

.....

23) 2 / 10தசம எண்ணாக எழுதுக?

.....

24) 0.75 ஐ பின்னமாக எழுதுக?

.....

25) 1Kg 250g சீனியின் விலை ரூபாய் 150.00 ஆகும் எனில் 500g சீனியின் விலை யாது?

.....

26) 4m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 20cm நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டி அகற்றப்பட்டன நாடாவிலிருந்து எஞ்சிய பகுதியின் நீளம் யாது?

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.ikedu.lk

27) ரமணன் மு.ப 6.20 ற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு 25 நிமிடங்களின் பின்னர் பாடசாலையை அடைந்தான் அவன் பாடசாலையை அடைந்த நேரம் யாது?

.....

28) பொம்மைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் ஜனவரி மாதம் 8090 பொம்மைகளும் பெப்ரவரி மாதம் 6009 பொம்மைகளும் உற்பத்தி செய்யப்பட்டன. இரண்டு மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டன பொம்மைகள் எத்தனை?

.....

29) திருமன நிகழ்வொன்றிற்கு ஆண்களின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு பெண்களும் பெண்களின் எண்ணிக்கையை விட 30 பேர் குறைவாக பிள்ளைகளும் வந்திருந்தனர் பிள்ளைகளின் எண்ணிக்கை 180 எனின் திரமண நிகழ்வில் கலந்து கொண்டோரின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

30) மாலாவின் வயது 10 வருடங்களும் 7 மாதங்களும் ஆகும். கமலாவின் வயது 12 வருடங்களும் 9மாதங்களும் ஆகும். அதன்படி இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?


.....

31) 2015 ஆம் ஆண்டு தனது 40 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய கமல் தனது 24 வது பிறந்தநாளைக் கொண்டாடிய வருடம் யாது?

.....

33) பயனத்தை ஆரம்பிக்கும் போது ஒரு வாகனத்தின் மானியின் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டன. | 0 | 5 | 3 | 8 | 7 | 0 | km வாகனம் மேலும் 100 km சென்ற பின்னர் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக்கூடுகளில் எழுதுங்கள்.

34) இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?



.....

35) விழா ஒன்றில் 6 அதிதிகள் தங்களுக்கிடையே கைகுலுக்கல்களை மேற்கொண்டனர் எனில் அங்கு இடம் பெற்ற கைகுலுக்கள் எத்தனை?

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---